ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2020.06.22 |

## தேசிய நுகர்வோர் சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் 2020 மேயில் மேலும் குறைவடைந்தது

**முதன்மைப் பணவீக்கம்**

ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் : 5.2%
ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் : 5.2%
மாதாந்த மாற்றம் : 0.4%

**மையப் பணவீக்கம்**

ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம்: 3.7%
ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் : 4.8%
மாதாந்த மாற்றம் : 0.7%







தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (தேநுவிசு 2013=100)[1] ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் 2020 ஏப்பிறலில் 5.9 சதவீதத்திலிருந்து 2020 மேயில் 5.2 சதவீதத்திற்கு மேலும் குறைவடைந்தது. இது, 2019 மேயில் நிலவிய உயர்ந்த தளத்தின் புள்ளிவிபரவியல் தாக்கத்தினாலும் பிரதானமாக உந்தப்பட்டிருந்தது. அதேவேளையில், உணவுப் பணவீக்கமும் (ஆண்டிற்கு ஆண்டு) 2020 ஏப்பிறலின் 12.2 சதவீதத்திலிருந்து 2020 மேயில் 11.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன் உணவல்லா பணவீக்கமும் (ஆண்டிற்கு ஆண்டு) 2020 ஏப்பிறலின் 1.1 சதவீதத்திலிருந்து 2020 மேயில் 0.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

ஆண்டுச் சராசரியின் அடிப்படையில் அளவிடப்படுகின்ற தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாற்றமானது 2020 ஏப்பிறலின் 5.1 சதவீதத்திலிருந்து 2020 மேயில் 5.2 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது.

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் மாதாந்த மாற்றமானது பிரதானமாக உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பின் காரணமாக 2020 மேயில் 0.4 சதவீதமாகக் காணப்பட்டது. அதன்படி, உணவு வகையினுள் பிரதானமாக மரக்கறிகள், உடன் மீன், பருப்பு மற்றும் தேங்காய் எண்ணெய் என்பவற்றின் விலைகளில் 2020 மே மாத காலப்பகுதியில் அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. எனினும், மாத காலப்பகுதியில் பெரிய வெங்காயம் மற்றும் தேங்காய் என்பவற்றின் விலைகள் கணிசமான வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

[1] தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (2013 = 100) தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

இதேவேளையில், 2020 மேயில் உணவல்லா வகையினுள் மதுசாரக் குடிவகைகள், புகையிலை, உணர்வூட்டும் பொருட்கள் (வெற்றிலைகள்); மற்றும் பொழுதுபோக்கு மற்றும் கலாசார (செய்தித்தாள்கள்) துணை வகைகளில் உள்ள பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்தன.

மேலும், மையப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2020 ஏப்பிறலில் 3.2 சதவீதத்திலிலிருந்து 2020 மேயில் 3.7 சதவீதமாக அதிகரித்த வேளையில் ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கமானது 2020 ஏப்பிறலின் 5.0 சதவீதத்திலிருந்து 2020 மேயில் 4.8 சதவீதத்திற்கு குறைவடைந்தது.

**அட்டவணை 01: தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள்**
**தளம் : 2013 = 100**

| ஆண்டு | மாதம் | சுட்டெண் | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) |
| 2018 | சனவரி | 125.8 | 123.9 | -0.6 | 0.1 | 5.4 | 2.1 | 7.6 | 4.5 |
| | பெப்புருவரி | 123.7 | 124.4 | -1.7 | 0.4 | 3.2 | 2.0 | 7.2 | 4.1 |
| | மாச்சு | 122.8 | 124.6 | -0.7 | 0.2 | 2.8 | 1.9 | 6.7 | 3.6 |
| | ஏப்பிறல் | 122.9 | 124.8 | 0.1 | 0.2 | 1.6 | 1.9 | 6.1 | 3.3 |
| | மே | 124.3 | 125.1 | 1.1 | 0.2 | 2.1 | 1.7 | 5.7 | 3.1 |
| | யூன் | 126.5 | 125.3 | 1.8 | 0.2 | 2.5 | 1.8 | 5.3 | 2.9 |
| | யூலை | 126.6 | 125.7 | 0.1 | 0.3 | 3.4 | 2.3 | 5.1 | 2.7 |
| | ஓகத்து | 125.4 | 126.3 | -0.9 | 0.5 | 2.5 | 2.7 | 4.7 | 2.5 |
| | செத்தெம்பர் | 124.4 | 126.9 | -0.8 | 0.5 | 0.9 | 3.1 | 4.0 | 2.4 |
| | ஒத்தோபர் | 124.9 | 127.3 | 0.4 | 0.3 | 0.1 | 3.4 | 3.3 | 2.4 |
| | நவெம்பர் | 127.7 | 127.6 | 2.2 | 0.2 | 1.0 | 3.1 | 2.7 | 2.4 |
| | திசெம்பர் | 127.1 | 127.6 | -0.5 | 0.0 | 0.4 | 3.1 | 2.1 | 2.4 |
| 2019 | சனவரி | 127.3 | 130.2 | 0.2 | 2.0 | 1.2 | 5.1 | 1.8 | 2.7 |
| | பெப்புருவரி | 126.7 | 131.3 | -0.5 | 0.8 | 2.4 | 5.5 | 1.7 | 3.0 |
| | மாச்சு | 126.4 | 131.8 | -0.2 | 0.4 | 2.9 | 5.8 | 1.7 | 3.3 |
| | ஏப்பிறல் | 127.3 | 132.6 | 0.7 | 0.6 | 3.6 | 6.3 | 1.9 | 3.7 |
| | மே | 128.7 | 133.0 | 1.1 | 0.3 | 3.5 | 6.3 | 2.0 | 4.0 |
| | யூன் | 129.2 | 133.0 | 0.4 | 0.0 | 2.1 | 6.1 | 2.0 | 4.4 |
| | யூலை | 129.4 | 133.4 | 0.2 | 0.3 | 2.2 | 6.1 | 1.9 | 4.7 |
| | ஓகத்து | 129.7 | 133.7 | 0.2 | 0.2 | 3.4 | 5.9 | 2.0 | 5.0 |
| | செத்தெம்பர் | 130.6 | 134.0 | 0.7 | 0.2 | 5.0 | 5.6 | 2.3 | 5.2 |
| | ஒத்தோபர் | 131.9 | 134.4 | 1.0 | 0.3 | 5.6 | 5.6 | 2.8 | 5.4 |
| | நவெம்பர் | 132.9 | 134.6 | 0.8 | 0.1 | 4.1 | 5.5 | 3.0 | 5.6 |
| | திசெம்பர் | 135.0 | 134.2 | 1.6 | -0.3 | 6.2 | 5.2 | 3.5 | 5.7 |
| 2020 | சனவரி | 137.0 | 135.3 | 1.5 | 0.8 | 7.6 | 3.9 | 4.1 | 5.6 |
| | பெப்புருவரி | 137.0 | 135.8 | 0.0 | 0.4 | 8.1 | 3.4 | 4.5 | 5.5 |
| | மாச்சு | 135.2 | 136.0 | -1.3 | 0.1 | 7.0 | 3.2 | 4.9 | 5.2 |
| | ஏப்பிறல் | 134.8 | 136.9 | -0.3 | 0.7 | 5.9 | 3.2 | 5.1 | 5.0 |
| | மே | 135.4 | 137.9 | 0.4 | 0.7 | 5.2 | 3.7 | 5.2 | 4.8 |

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்